விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 311 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 09 வியாழக்கிழமை (26.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## இலங்கை வந்தடைந்தது சீன ஆய்வுக் கப்பல்

### கடும் அதிருப்தியில் இந்தியா



(கொழும்பு)

இந்தியாவின் எதிர்ப்பை மீறி சீனாவின் ஆய்வுக் கப்பல் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

இந்தக் கப்பலின் வருகைக்கு இந்தியா தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

அரசியலில் பங்களிக்க முடியாதிருப்பதால்

## எம்.பி பதவியை சம்பந்தன் துறக்க வேண்டும் - சுமந்திரன்



(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அவருடைய முதுமையின் பொருட்டு நடைமுறை அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாதிருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்

02

# அமைச்சரவை மாற்றம்
# மகிந்த அதிருப்தி



## தொலைபேசியில் கடும் தொனியில் ரணிலை எச்சரித்ததாக தகவல்

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கடும் தொனியில் எச்சரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீப்பந்த போராட்டம்



(மட்டக்களப்பு)

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத்

15

### 4 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் நான்கு அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைத்துள்ளது.

சம்பா அரிசி ஒரு கிலோ 6 ரூபாயினால்குறைப்பு. புதிய விலை 222

15

‘அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன்’

## மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும்

### இனவாதத்தை கக்கிய அம்பிட்டிய தேரரால் பரபரப்பு



(மட்டக்களப்பு)

அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் என பார்ப்போம் என்று மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமன ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர

15

## காசா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

### ஒரே நாளில் 704 பேர் பலி

(காசா)

காசா மீது இஸ்ரேல் வான் வழி தாக்குதல் நடத்தியதில் ஒரே நாளில் 704 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்து ஒரே

15

மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்காக

## அரசு புதிய சட்டங்களை கொண்டுவர நடவடிக்கை

(கொழும்பு)

மக்கள் எதிர்பார்க்கும் முறைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தற்காலத்திற்கு ஏற்ற புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று

15

## கூட்டணி அரசியல் தொடர்பாக ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்

### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டணி அரசியல் தொடர்பாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின்பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நோக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதி ரணில் இரட்டை வேடம்

## எதிரணி விமர்சனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரட்டை வேடம் தற்போது நாட்டு மக்களுக்கு தெளிவாகப் புரிந்துவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷர்களின் ஆசிர்வாதத்தோடு ஆட்சிக்கு வந்த தலைவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட தவணையை உரிய நேரத்திற்கு பெற முடியாமல் தோல்வியடைந்து ள்ளனர்.

மக்கள் ஆணையற்ற அரசாங்கத்தின் இறுதி நாடகமே தற்போது அரங்கேற்றப்படுகிறது.

பண வீக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் ஆய்வுகளை வெளியிட்டாலும், உண்மையிலேயே பணவீக்கம் குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதை சந்தைக்கு சென்று பார்த்தால் நடைமுறை ரீதியாக புரிந்து கொள்ள முடியும்.

அரசியலமைப்பின் பிரகாரம் பல்வேறு தேர்தல்களை நடத்த வேண்டியுள்ள தருணத்திலும் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அரசாங்கம் கூறிவருகிறது.

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாக கட்சி சம்மேளனத்தில் கூறிய ஜனாதிபதியே தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான ஆணைக்குழுவை நியமித்து தனது இரட்டை வேடத்தை நாட்டுக்கு காண்பித்துள்ளார்.

மக்களின் உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் மீற வேண்டாம் என அரசாங்கத்தை நாம் கேட்கிறோம்.

தேசிய தேர்தல் ஒன்றிற்கு சென்று மக்கள் ஆணையை கோருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7460)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


## எம்.பி பதவியை...

பகிரங்கமாக கோரியுள்ளார்.

288 பாராளுமன்ற நாட்களில் வெறுமனே 39 நாட்களில் தான் பாராளுமன்றத்துக்கு இரா.சம்பந்தன் வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ளது. அவ்வாறான நிலையில் அவருக்கு பாராளுமன்ற சம்பளம், எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகள் என மொத்தமாக 4 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இக் காலகட்டத்தில் இதுவொரு மாற்று வடிவமாக அமைகின்றதா? என்று சுமந்திரன் தனியார் தொலைக்காட்சியொன்றில் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்ற வேளையில், வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன்,

சம்பந்தனின் முதுமை காரணமாக அவர் தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாதிருக்கின்றமை தொடர்பில் நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன்.

அந்தவகையில் நான் ஒருவிடயத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்கமாக தெரிவிக்க விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னதாக அவரால் பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்க முடியாத நிலைமைகள் ஏற்பட ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் நான் சம்பந்தனிடத்திலேயே நேரடியாக பதவி விலகுமாறு கோரினேன். அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்திருந்தார். அத்துடன், அவர் அதற்கான காரணத்தினையும் தெளிவுபடுத்தினார்.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் எனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் " என்று குறிப்பிட்டார். அதனை சம்பந்தன் மீண்டும் நினைவு படுத்தினார்.

எனினும், திருகோணமலை மக்களை பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நாங்கள் நியமித்தாலும் அவர் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுவரா என்பது பற்றிய பல கரிசனைகள் உள்ளன.

எவ்வாறாயினும், சம்பந்தனின் முதுமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்து வரும் காலத்தில் அதுதொடர்பான சில நடவடிக்கைகளை எடுப்போம் என்றார். (ம-7)

## மரண அறிவித்தல்



மண்ணில் 1941 . 12 . 06

விண்ணில் 2023 . 10 . 23

### திருமதி அரியமலர் மனோகரன்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக் கோட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி அரியமலர் மனோகரன் அவர்கள் 23.10.2023 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மகேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியும் அமரர் முருகேசு மனோகரனின் அன்பு மனைவியும் ஆனந்த கதிரமலை, ஆனந்த குமாரதாஸ், ஆனந்த பாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தமணி, மனோன்மணி, சுந்தரராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் முருகதாஸ், சுமதி, தயானந்தன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மப்பிரபா, கிருபாரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிஸின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.10.2023 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
மகன் முருகதாஸ்
மகள் சுமதி
பெறாமகன் தயானந்தன்
077 344 3034

'கதிரமலை வாசம்'
புலோலி மேற்கு,
கிராமக்கோடு.

(C-7492)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 21.10.1934

மறைவு 05.11.2022

தோற்றம் 17.04.1941

### அமரர்கள் சின்னப்பு நடேசபிள்ளை நடேசபிள்ளை புவனேஸ்வரி

(நயினாதீவு – அவுஸ்திரேலியா)

இறப்பிலும் இணைந்த
இல்லற ஞானிகளே!
மறந்திட முடியா
மானிடத் தெய்வங்களே!

உங்களை இழந்து
ஓராண்டு சென்றதுவே
எங்களின் மனங்களில்
என்றுமே வாழ்வீர்!

ஆத்மாக்கள் சாந்திபெற
அம்பாளை வேண்டுகின்றோம்!

இராச வீதி,
கோப்பாய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(17578)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையில் அதிகரிப்பு

## செப்டெம்பர் மாதம் மட்டும் 168 சிறுமிகள் துஷ்பிரயோகம்

### அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் எரான் எம்.பி

**(கொழும்பு) இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் 168 வரை பதிவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதை குறிப்பிட்டார்.

மேலும் இவர்களில் 22 பேர் கர்ப்பமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 11,000 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் குறைந்தது 41% துஷ்பிரயோகத்தின் கீழ் வருகின்றன.

அந்த வகையில், இந்த ஆண்டு செப்டெம்பரில் பதிவான வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது, இது ஒரு அதிகரிப்பை காட்டுகிறது என் றும் தெரிவித்தார். (நி-5-6)



# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 165 மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)


ஆசிய அபிவிருத்தி வங்கியின் 165 மில்லியன் டொலர்கள் நிதியுதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகை வட்டி வீதத்தின் கீழ் முதலீட்டு மற்றும் நடவடிக்கை மூலதனத்தை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் முன்மொழிவுத் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வங்கிகளால் நிதி வழங்குவதற்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ள நேரிட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக தேசிய கடன் பாதுகாப்பு நிறுவனத்தைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமது வியாபாரங்களுக்கு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொள்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்காக "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கான நிதித் திட்டம்" எனும் புதிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், அதற்காக முற்கட்டமாக 100 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்குரிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5-6)

# இலங்கையை வந்தடைந்தது சர்ச்சைக்குரிய சீனக் கப்பல்



(கொழும்பு)

சீனாவின் Shi Yan 6 ஆய்வுக் கப்பல் பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில், நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி சீனாவில் இருந்து பயணத்தை ஆரம்பித்த Shi Yan 6 ஆய்வுக் கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

Shi Yan 6 கப்பலுடன் இணைந்து ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த ருகுணு பல்கலைக்கழகம் அதிலிருந்து விலகியது.

இந்தப் பின்னணியில், கப்பலின் வருகையை அடுத்த மாத இறுதி வரை ஒத்திவைக்குமாறு சீனாவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனை வெளிவிவகார அமைச்சும் உறுதிப்படுத்தியது.

எவ்வாறாயினும், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அருகில், இந்து சமுத்திரத்தில் ஆய்வு அல்லது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த Shi Yan 6 கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பலின் வருகை தொடர்பாக இந்தியா தொடர்ச்சியாக கண்காணித்து வந்த நிலையில், கப்பல் வருகைக்கு எதிர்ப்பினையும் வெளியிட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# விரைவில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து பயன் பெறுங்கள்

### அஸ்வெசும பயனாளிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வேலைத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு இதுவரையில் அந்த நன்மைகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் விரைவில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து அந்த நலன்களை பெற்றுக் கொள்ளுமாறு நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவின் தலைமையில் அண்மையில், நலன்புரி நன்மைகள் சபை உள்ளிட்ட உரிய தரப்பினருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை உரிய வகையில் வங்கிக் கணக்குகளை திறக்காததன் காரணமாக 156, 261 பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5-6)

# காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் சீதைக்கு கோவில்

### இந்தியத் தேர்தலில் வாக்குறுதி

(டில்லி)

ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் சீதைக்கு கோவில் கட்டுவோம் என மத்தியபிரதேச சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி வாக்குறுதி அளித்துள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள் 5 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடக்கவுள்ளது.

மத்திய பிரதேசத்தில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் தேர்தல்களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

இந்தநிலையில் காங்கிரஸின் முதலமைச்சர் வேட்பாளர் கமல்நாத் பிரசாரத்தை எக்ஸ் தளம் வாயிலாக தொடங்கியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் கிடப்பில் உள்ள இலங்கையில் சீதை கோவில் கட்டும் திட்டம் தொடங்கப்படும். மேலும் கோவில் அர்ச்சகர்களின் உதவித்தொகை உயர்வு, கோவில் ஆக்கிரமிப்பு நிலங்கள் மீட்பு, கோவில் சொத்துகள் பராமரிப்பு ஆகியவை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். (நி-5-6-)

# மீண்டும் வரிசையுகம் தலையெடுக்கும்

### ரங்கே பண்டார எச்சரிக்கை

(கொழும்பு)

வங்குரோத்து அடைந்திருக்கும் நாட்டை அதில் இருந்து மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவம் மற்றும் சர்வதேச நாடுகளுடன் இருக்கும் தொடர்புகள் மூலம் பொருளாதார நெருக்கடியை போக்கிக்கொள்ள உதவிகளை பெற்று வருகிறார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பலரும் பாராட்டியுள்ளனர்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் உதவியை பெற்றுக்கொள்வதற்காக நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் முடிந்தளவு பூரணப்படுத்தி இருக்கிறது.

அதில் இடம்பெற்ற சில குறைபாடுகள் காரணமாக இரண்டாம் கட்ட உதவியை பெற்றுக்கொள்வதற்கு சற்று காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

இறுதியாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அதற்கான இணக்கப்பாடு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட உதவி இலங்கைக்கு வழங்குவதற்கு நாணய நிதியத்தின் செயற்குழு சபை மட்டத்தில் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக நாணய நிதியத்தின் பேச்சாளர் பீட்டர் புறூக் தெரிவித்திருக்கிறார்.

எனவே இந்த உதவிகள் கிடைக்கப்பெற்று, பொருளாதார நிலைமை படிப்படியாக சரிசெய்வதற்கு மக்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

நாடு வங்குரோத்து நிலைக்கு செல்ல ஜனாதிபதி காரணமில்லை. வங்கு அடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்பவே ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார்.

அதனால் மக்கள் பொருளாதார நெருக்கடி நிலையில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் மின் கட்டணம் மற்றும் ஏனைய கட்டண அதிகரிப்புகள் தாங்க முடியாத சுமையாகும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

இருந்தபோதும் குறுகிய காலத்துக்காவது இதனை பொறுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் கடந்த வருடத்தில் இடம்பெற்றதைப் போல் எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்ள வரிசையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டேவிட் வோர்னர், மக்ஸ்வெல் சதம் நெதர்லாந்தை வீழ்த்தி ஆஸி அபார வெற்றி





நெதர்லாந்தை வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

அதன்படி முதலில் ஆடிய அவுஸ்திரேலியா அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. ஆரம்ப வீரராக களமிறங்கிய மிட்செல் மார்ஸ் 9 ரன்களில் ஆட்டமிழந்தார். இவருடன் களமிறங்கிய டேவிட் வோர்னர் 93 பந்துகளில் 104 ரன்களை குவித்தார்.

அடுத்து வந்த ஸ்டீவன் ஸ்மித் 68 பந்துகளில் 71 ரன்களை எடுத்தார். இவரை தொடர்ந்து களமிறங்கிய லபுஷேன் 47 பந்துகளில் 62 ரன்களை குவித்தார். தொடர்ந்து மக்ஸ்வெல் சதம் கண்டார். போட்டி முடிவில் அவுஸ்திரேலியா அணி 8 விக்கெட்டுகளை இழந்து 399 ரன்களை குவித்தது.

நெதர்லாந்து சார்பில் லோகன் வான் பீக் நான்கு விக்கெட்டுகளையும், பாஸ் டி லீட் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஆர்யன் டட் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து, 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது.

இதில், விளையாடிய பெரும்பாலான வீரர்கள் ஒற்றை இலக்கில் ரன்கள் எடுத்து அவுட்டாகினர். அர்யன் தட் 7 ரன்கள், அக்கர்மென் 4 ரன்கள், வேன் பீக் மற்றும் வேன் மீக்கரன் தலா 10 ரன்கள், விக்ரம்ஜித் சிங் 4 ரன்கள், வேன் டெர் மார்வே 5 ரன்கள், பாஸ் டி லீட் 10 ரன்களும் எடுத்து மொத்தமாக 100 ரன்கள் கூட தாண்ட முடியாமல் திணறினர்.

இந்நிலையில், நெதர்லாந்து அணி 21 ஓவரின் 90 ரன்களில் 10 விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வி அடைந்தது.

இதன் மூலம், அவுஸ்திரேலியா அணி 309 ரன்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றுள்ளது. (ம-7)




## கப்டன் பதவியிலிருந்து பாபர் அசாமை நீக்க வலியுறுத்து



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியின் நிலைமை மோசமாக இருக்கிறது.

முதல் 2 ஆட்டத்தில் வெற்றி பெற்ற அந்த அணி, தொடர்ச்சியாக 3 போட்டிகளில் தோற்றது.

சென்னையில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானிடம் முதல் முறையாக தோல்வியை தழுவியது. இந்தத் தோல்வியால் எஞ்சிய 4 ஆட்டங்களில் வெற்றி பெறவேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு உள்ளது.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக 282 ரன் குவித்தும் தோற்றது அந்த அணிக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.

மோசமான பந்து வீச்சு, பீல்டிங் இதற்கு காரணமாக அமைந்தது.

இந் நிலையில் பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாமை கப்டன் பதவியிலிருந்து நீக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 5 | 5 | 0 | 10 |
| 2 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 8 |
| 3 | நியூசிலாந்து | 5 | 4 | 1 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 6 |
| 5 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 7 | இலங்கை | 4 | 1 | 3 | 2 |
| 8 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 2 |
| 9 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 2 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 2 |




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பசு மாடு திருடினால் 10 லட்சம் அபராதம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பசுமாடுகளை திருடுபவர்களுக்கான அதிகபட்ச அபராதத் தொகையான 50,000 ரூபாவை 10 இலட்சம் ரூபாவாக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**


மேலும், இதுபோன்ற திருட்டுகளுக்கு குறைந்தபட்சம் ஓராண்டு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கும் வகையிலான சரத்துக்களை உள்ளடக்கி விலங்குகள் நலச்சட்டத்தில் திருத்தம் செய்ய கால்நடை மேம்பாட்டு துறைக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கால்நடை பாதுகாப்பு சட்டத்தின் புதிய திருத்தங்கள் தொடர்பில் விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாடு திருட்டுகள் அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டு அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் அநுராதபுரம் மாவட்டத்தில் நாளொன்றுக்கு அதிகளவு பால் கொடுக்கும் பசுவும் திருடப்பட்டு கொல்லப்பட்டதாக குறிப்பிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, பசு திருட்டை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி-5-6)

# கடன் வழங்கிய அனைவரையும் சமமாக நடத்தவேண்டும்

## அமெரிக்க தூதுவர் டுவிட்



(கொழும்பு)

இலங்கை கடன் வழங்கிய அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வங்கி ஆளுநரை சந்தித்து உரையாடிய வேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.


இது குறித்து அமெரிக்க தூதுவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது,

இன்று நான் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரை சந்தித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கை சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாவது தொகுதி கடனை பெறுவதில் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக வாழ்த்துக்களை தெரிவித்தேன்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நியாய பூர்வமானதாகயிருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன் - கடன் வழங்கிய அனைவரையும் சமமான விதத்தில் நடத்துவது அவசியம் என்பதை வலியுறுத்தினேன் எனவும் ஜூலி சங் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ள அனைத்து தரப்பினரும் வெளிப்படை தன்மையுடன் நடந்துகொள்வது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்து நியாயம்,வெளிப்படை தன்மை, ஒருமைப்பாடு மற்றும் உள்ளடக்கிய தன்மை ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதார சூழல் குறித்து அமெரிக்கா உறுதியுடன் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# படு பாதாளத்தில் நாடு விழும்- சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

கோமாளிகளின் கூடாரமாக பாராளுமன்றம் மாறியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்பொழுது அதிகமானவர்கள் ஒருவேளை உணவையே உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது.அதிலும் சிலர் ஒருவேளை உணவை கூட உண்ண முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த அளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்நிலை தொடருமாயின் சோமாலியாவை விட எமது நாடு படு பாதாளத்தில் சென்றடையும் எனவும் தெரிவித்தார்.அயல்நாட்டு மீனவர்களின் ரோலர் படகுகளின் பிரச்சினையை தீர்க்க முடியாத அமைச்சர், ரோலர் படகை இரும்பு படகு மூலம் இடிப்போம் என்று கூறியவர் தற்பொழுது சீனாவிடம் சென்று மண்டியிட்டு மீன் இறக்குமதி செய்வதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் இறக்குமதி செய்யப்படுகின்ற மீன் இனங்களையே நாங்கள் உண்ண வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மீனவர்களின் வாழ்வாதாரமும் இல்லாமல் அழிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி-5-6)

# இராசிபலன்

26.10.2023
ஐப்பசி 09, வியாழக்கிழமை
துவாதசி முற்பகல் 8.29 மணிவரை

பூரட்டாதி முற்பகல் 10.54 மணிவரை
சுபநேரம் -7.33-9.03 மணிவரை
இராகுகாலம்-1.33-3.03 மணிவரை

சந்திராஷ்டமம்-
மகம்
பிரதோச விரதம்.

**வளவன்**

**மேஷம்**
வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**சிம்மம்**
உறவினர், நண்பர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**கன்னி**
பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களை நாடிவரலாம்.

**விருச்சிகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு**
பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்**
பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்த சேரலாம்.

**கும்பம்**
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள்.

**மீனம்**
குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உழைக்க நேரம் ஒதுக்குங்கள். அது வெற்றியின் விலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவற்ற வீதிக்குறியீடுகளால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்


(முறிகண்டி)

**வீதியோரங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞை குறியீடுகள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் இரவு வேளைகளில் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் அபாயம் காணப்படுகிறது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் முதல் பூநகரி சங்குப்பிட்டி பாலம் மற்றும் பரந்தன் முதல் முல்லைத்தீவு வரை நகர்ப்புறம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பாதசாரி கடவை, வீதி வளைவு சமிக்ஞை போன்ற பல வீதிக் குறியீடுகள் தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது.

இதனால் அவ் வீதிகளூடாக செல்லும் வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதுடன் வீதி விபத்துக்களும் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

எனவே இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்என வாகன சாரதிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (நி-5-6-100)



# முல்லையில் இ.போ.ச சாரதி மீது தாக்குதல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நின்றிருந்த இ.போ.ச சாரதி மீது ஹயஸ் வாகனத்தில் வந்த நபர் தாக்கியதாக தெரிவித்து சாரதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

முல்லையில் இருந்து சிலாவத்தை ஊடாக மாங்குளம் நோக்கி நேற்று முன்தினம் மாலை சென்று கொண்டிருந்த பேருந்து சிலாவத்தை பகுதியில் பயணிகளை ஏற்றிக் கொண்டு நின்ற வேளை ஹயஸ்ரக வாகனத்தில் வந்த நபர் இ.போ.ச சாரதி மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்து சென்றுள்ளார்.

இதையடுத்து தாக்கப்பட்டவர் நேற்று முன்தினம் இரவு முல்லை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-299)

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்குள் மதுபோதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு உள்ளே செல்ல முயன்ற இருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நோயாளி ஒருவரை பார்வையிடுவதற்காக மருத்துவமனை வளாகத்திற்குள் மதுபோதையில் அத்துமீறி நுழைந்த இருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு வளாகத்துக்குள் உள் நுழைந்தனர்.

விடயம் தொடர்பில் மருத்துவமனை பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

போதனா மருத்துவ மனையில் நோயாளிகளை பார்வையிட வருபவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்படும் நிலைமை தற்போது அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# யாழில் பிறந்தநாள் கொண்டாடிய சந்தேகநபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழில் சட்டவிரோதமாக கூட்டம் கூட்டி பிறந்தநாளை கொண்டாடிய பிரதான சந்தேக நபர் யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைக்கு பின்னர், நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய போது , சந்தேக நபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இது வரையில் குறித்த சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# வவுனியா நகரசபை தீயணைப்பு சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை தீயணைப்பு சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை தீயணைப்பு சேவைக்கு பயன்படுத்தப்படும் வாகனம் பழுதடைந்துள்ளதனால் அதனைத் திருத்தும் நடவடிக்கைக்கு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் அச்சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மீளவும் குறித்த வாகனம் திருத்த வேலைகள் நிறைவடைந்ததும் அதன் பணிகள் மிக விரைவில் தொடர்ந்து இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6-299)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"இஸ்ரேலின் ஆதிக்க இருப்பும் பாலஸ்தீன மக்களின் உரிமையும்"என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிறப்புரையினை ஆய்வாளரும். நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி தெ.ஞா.மீநிலங்கோ ஆற்றவுள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 200 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 250 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 160 | 150 |
| கோவா | 250 | 200 | 200 | 200 |
| கரட் | 250 | 300 | 320 | 400 |
| பூசணி | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 180 | 240 | 120 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 250 | 120 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 300 | 400 |
| லீக்ஸ் | 200 | 160 | 150 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 120 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 250 | 300 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 240 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 60 | 150 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 500 | 400 |
| முள்ளங்கி | 100 | 140 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# பாலஸ்தீன-இஸ்ரேல் மோதலை தடுத்து நிறுத்த சர்வதேசம் முன்வரவேண்டும்

## சமத்துவக்கட்சி

(கிளிநொச்சி)

பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தபோகும் பாலஸ்தீன-இஸ்ரேல் மோதல் முடிவுக்கு கொண்டுவர சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரைநூற்றாண்டுகள் கடந்தும் முடிவுறாது தொடரும் பாலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைக்கு, பொருத்தமான தீர்வொன்றினை சர்வதேச சமூகம் தாமதிக்காது பெற்றுக்கொடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் மீளவும் ஒரு மனிதப்பேரவலம் ஏற்படாதவாறு தடுக்கும் பாரிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு இருக்கின்றது என்பதை நாங்கள் நினைவுறுத்துகிறோம்.

ஒரு சிறு நிலப்பரப்பில் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பிராந்தியத்தின் ஒட்டுமொத்த அமைதிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய மேற்படி போரானது அழிவுகளை தவிர வேறொன்றையும் விட்டுசெல்லப்போவதில்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பொருத்தமான உடனடி நடவடிக்கைகளின் மூலம் வளை குடாவில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் வலியுறுத்துகிறோம் என அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் வந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள்

## பொலிஸார் அவசர அறிவிப்பு

(கொழும்பு)

பணம் பறிக்கும் நோக்கில் இனந் தெரியாதோரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வந்தால் உடனடியாக தங்களுக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யுமாறு இலங்கை பொலிஸ் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

வெளிநாட்டில் வசிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் உத்தரவின் பேரில் வர்த்தகர் ஒருவரின் தொலைபேசி அழைப்பின் ஊடாக கொலை மிரட்டல் விடுத்து பணம் கப்பம் செய்ய முயற்சித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தம்மை கையடக்கத் தொலைபேசியில் தொடர்புகொண்ட இனந்தெரியாத நபர் ஒருவர் கொலைமிரட்டல் விடுத்து 2 மில்லியன் ரூபா பெற முயன்றதாக வர்த்தகர் ஒருவர் முல்லேரியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாடு தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் நேற்று முன்தினம் மாலை முல்லேரியா அங்கொட தெல்கஹவத்தை பிரதேசத்தில் வைத்து 51 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வாழும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் உத்தரவின் பேரில் குறித்த நபர் வர்த்தகரை அச்சுறுத்தி பணம் பறிக்க முயற்சித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

அண்மைக்காலமாக இதுபோன்று பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.(நி-5-6)

# இலங்கை வந்த செக் குடியரசின் முதலாவது பயணிகள் விமானம்

(கொழும்பு)

சர்வதேச சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கு செக் குடியரசில் இருந்து இயங்கும் Lot Polish Airlines, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

நேற்றுக் காலை விமான நிலையத்தை வந்தடைந்த இந்த விமானம் செக் குடியரசில் இருந்து இலங்கைக்கு இயங்கும் Lot Polish Airlines இன் முதலாவது பட்டய விமானம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பட்டய விமானத்தில் 252 சர்வதேச சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இந்த முதலாவது விமானமானது நீர் வணக்கத்துடன் வரவேற்கப்பட்டது.

மேலும் பயணிகள் அனைவரும் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளுடன் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டனர். மேலும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளுக்கும் சிலோன் டீ பரிசுகளும் வழங்கி மகிழ்விக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்




திருமதி. தவமலர் இராமச்சந்திரன்

(பகுதித் தலைவர் SLTS-I)

சேவை விபரம்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
11.01.1993-09.05.2010 (ஆசிரியர்)
யா/தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
10.05.2010-17.02.2013 (ஆசிரியர்)
யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்
18.02.2013-25.10.2023 (பகுதித்தலைவர்)

சிறப்புற நீங்கள் செய்த
கவினுறு சேவை தன்னால்
பலன் பெறும் மாணவர் தம்
மனதினில் என்றும் வாழும்
உயர் மனச் செம்மல் உங்கள்
நிகரிலாக் கல்விச் சேவை
ஓய்வுறும் போதும் உங்கள்
உடல் நலம் சிறந்து வாழி
உறவுகள் உயர்ந்து வாழி

இனிதே வாழ்த்தும்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலயம்.

(வி-7490)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2949

### தனுசா




### குருபரன்




### விமேஸ்




### மயூரி




### சுகந்தினி




### பிரவீனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெய[illegible] facebook [illegible]தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

## புற்றுநோயை குணப்படுத்தும் சோப் அமெரிக்காவில் அசத்திய இளம் விஞ்ஞானி




(வோஷிங்டன்)

14 வயது சிறுவனுக்கு அமெரிக்காவின் சிறந்த இளம் விஞ்ஞானி எனும் கௌரவம் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

அமெரிக்காவில் 5 ஆம் தரத்தில் இருந்து 9 ஆம் தரம் வரை பயிலும் மாணவ -மாணவியர்களின் விஞ்ஞான ஆர்வத்தை ஊக்குவிக்கவும் உலகில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்த கூடிய கண்டுபிடிப்புகளில் அவர்கள் தங்கள் அறிவாற்றலை செலுத்தவும் 3M and Discovery Education எனும் அமைப்பால் இளம் விஞ்ஞானிகளுக்கான போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

இதில் அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலத்தின் அன்னண்டேல் பகுதியை சேர்ந்த 14 வயதான ஹேமன் பெகேல் எனும் 9 ஆம் வகுப்பு மாணவன் கலந்து கொண்டான்.

இதில்பங்கேற்றஹேமன், தனது கண்டு பிடிப்பாக புதிய சோப் ஒன்றை காட்சிப்படுத்தியுள்ளார்.

இந்த சோப்பிற்கான உற்பத்தி செலவு ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவு.

ஆனாலும், தோல் புற்று நோய்க்கு சிகிச்சையளிக்க இந்த சோப்பினை பயன்படுத்தலாம்.

பல இளம் மாணவ மாணவியர்கள் பங்கேற்ற இந்த போட்டியில் ஹேமன் முதல் பரிசை வென்றார்.

அத்துடன் "அமெரிக்காவின் சிறந்த இளம் விஞ்ஞானி" எனும் விருதும் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

2020 இல் உலகளவில் சுமார் 15 லட்சம் பேருக்கு தோல் புற்று நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இப் பின்னணியில் ஹேமனின் இந்த முக்கிய கண்டு பிடிப்பு எல்லோராலும் பாராட்டப்படுகிறது. (நி-5-6)

# ஹமாஸ்-இஸ்ரேல் தா

# 400 பாலஸ்தீன சிறுவர்கள்

## யுனிசெஃப் அதிர்ச்சித் த

(காசா)

**ஹமாஸ், இஸ்ரேல் போர்த்தாக்குதலில் நாளா பாலஸ்தீன சிறுவர்கள் கொல்லப்படுகின்றார்கள் எ அமைப்பின் மத்திய கிழக்கிற்கான இயங்குநர் அ தெரிவித்துள்ளார்.**



காசாவில் கடந்த 18 நாட்களில் 2346 சிறுவர்கள் கொல்லப்பட்டு 5364 பேர் காயமடைந்துள்ளனர்.

நாளாந்தம் 400 பாலஸ்தீன சிறுவர்கள் கொல்லப்படுவதாக அடெலே கொடர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் காணப்படும் நிலைமைகள் கூட்டு மனசாட்சி மீதான கறையாகும் என தெரிவித்துள்ள யுனிசெஃப் அதிகாரி சிறுவர்களின் உயிரிழப்பு, காயங்கள் எண்ணிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது எனவும் இஸ்ரேல் வான் தாக்கு

த
இ
கு
க
இ
கு
து
த
வ

த
சி
த்

# ஹமாஸ் அமைப்புக்கு

## ஐ.நா பொதுச்செயலாளர் ராஜி

(நியூயோர்க்)

காசா மீதான தனது தாக்குதலை இஸ்ரேல் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

காரணம் இல்லாமல் ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்தவில்லை என ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் அதன் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கூறியிருந்தார்.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள இஸ்ரேல் ஐ.நா பொதுச் செயலாளர் பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

### இஸ்ரேல் கோ

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த 7 ஆம் திகதி திடீரென தாக்குதல் நடத்தினர்.

கை
ன

# சரக்குக் கப்பல்கள் மோதி விபத்து

## பலர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்



(பெர்லின்)

ஜேர்மனியின் கடற்பரப்பில் இரண்டு சரக்கு கப்பல்கள் மோதிய விபத்தில் பலர் உயிரிழந்திருக்கலாம் என தகவல்கள் வெளியாகின்றன.

ஜேர்மனியின் வடக்கு கிழக்கு கடற்பரப்பில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரிட்டன் கொடியுடன் பயணித்துக்கொண்டிருந்த வெரிட்டி என்ற கப்பல் பஹா மாவை சேர்ந்த பொலைசி என்ற கப்பலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெரிட்டி கப்பல் மூழ்கியுள்ள நிலையில் அதன் ஏழு பணியாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என ஜேர்மன் தகவல்கள் தெரி வித்துள்ளன. ஆறுபேர் காணாமல் போயுள்ளனர் என வும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5-6)

# 168 வாகனங்கள்

# மோதி தொடர் விப

## 63 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் மூடு பனி காரணமாக 168 வாகனங்கள் மோதி 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு 63 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமெரிக்காவில் லூசியானா மாகாணத்தின் தெற்கு பகுதியில் மிகப்பெரிய சதுப்பு நிலம் காணப்படுகிறது.

குறித்த பகுதியில் ஏற்பட்ட தீப்பரவல் முழுமையாக மற்றைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவியுள்ளது.

இதற்கிடையே அங்கு காலையில் கடும் பனிப் பொழிவு உருவானது. இந்த பனிப்பொழிவுடன் தீயில் இருந்து வெளியேறிய புகையும் சேர்ந்தபோது அந்த பகுதியில் உள்ள சாலை முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சி அளித்துள்ளது.

மூடுபனி காரணமாக எதிரே வந்த வாகனங்கள் தெரியாததால் முன்னால் வந்த கார் மீது வந்த

யி
க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தாக்குதலில் நாளாந்தம் ...கள் கொல்லப்படுகின்றனர்

## ...த் தகவல்

...நாளாந்தம் 400 ...கள் என யுனிசெஃப் ...ர் அடெலே கொடர்




...தலை ஆரம்பித்த நாள் முதல் இதுவரையில் 7 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் உயிரிழந்துள்ளதாகவும் இதேவேளை, 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் காசாவின் சுகாதார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறுவர்களை கொலை செய்தல், அங்கவீனர்களாக்குதல், சிறுவர்களை கடத்துதல், மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகளை தாக்குதல் போன்றன சிறுவர்கள் உரிமை மிக மோசமாக மீறப்படுவதற்கு வழி வகுக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வான்வழி தாக்குதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களை சேர்ந்த சுற்று வட்டத்தில் இருந்த ஆயிரத்திற்கும் அதிகமான கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளதால் 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காசாவில் இருந்துஇடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், 222 இஸ்ரேலியர்கள் தற்போது பணயக் கைதிகளாக ஹமாஸ் வசம் உள்ளதாக, காசாவில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இஸ்ரேலின் கோரத் தாக்குதல் ஒரே நாளில் 704 பேர் பலி



(காசா)

இஸ்ரேலின் தாக்குதலில் ஒரே நாளில் 704 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பு போர் 20 நாளாகவும் நீடித்து வரும் நிலையில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றமை உலக அளவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காசா மீது இடைவிடாத தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்தது.

அதன்படி இஸ்ரேல் தனது வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில் நேற்று ஒரே நாளில் இஸ்ரேல் தாக்குதலில் 704 பேர் பலியானார்கள். இஸ்ரேல் தாக்குதல் தொடங்கியதில் இருந்து ஒரே நாளில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக பாலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் மூலம் குண்டு மழை பொழிந்து வரும் நிலையில்நேற்று முன்தினம் 400 இற்கும் மேற்பட்ட ஹமாஸ் இலக்குகளை தாக்கியதாகவும் ஏராளமான ஹமாஸ் அமைப்பினரை கொன்றதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இதற்கிடையே எரிபொருள் தீர்ந்து விட்டதால் காசாவில் அனைத்து மருத்துவமனைகளும் முடங்கியுள்ளதால் சிகிச்சை பெறுபவர்கள் கடும் தவிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள்.

இதனையடுத்து காசாவுக்குள் எரிபொருளை அனுப்ப அனுமதிக்க வேண்டும் என்று இஸ்ரேலை உலக நாடுகள் வலியுறுத்தி உள்ளன. (நி-5-6)

# ...க்கு ஆதரவாக பேசிய ...ராஜினாமா செய்ய வேண்டும்

## ...கோரிக்கை

அத்துடன் பலர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது.

இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

தொடரும் தாக்குதலில் இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

பொதுச்செயலாளர் கூறிய கருத்துக்களுக்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் இஸ்ரேல் வெளியுறவு மந்திரி இலய் கோஹன் மற்றும் ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் இர்டான் வலியுறுத்தியுள்ளனர். (நி-5-6)

# கடத்திச் செல்லப்பட்ட 1000 பூனைகள் மீட்பு

(பீஜிங்)

சீனாவில் மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சியுடன் கலந்து விற்பனை செய்வதற்காக லொறியொன்றில் கடத்திச் செல்லப்பட்ட 1000 பூனைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட அதிரடிசோதனை நடவடிக்கையின் போதே இச் சம்பவம் அம்பலமாகியுள்ளது.

ஜியாங்சுவில் உள்ள இறைச்சிக் கடையொன்றுக்குக் கொண்டு செல்லப்பட்ட பூனைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ...ள் ஒன்றுடன் ஒன்று ...விபத்து-8 பேர் பலி



லொறி மோதியது.

இதில் அந்த டேங்கர் லொறியில் இருந்து வேதிப் பொருட்கள் கசிந்து மேலும் புகைமூட்டமாக மாறின. எனவே ஒன்றன்பின் ஒன்றாக 168 வாகனங்கள் மோதி பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது. (நி-5-6)

# பிரித்தானியா நோக்கிச் சென்ற 99 அகதிகள் கடற்படையினரால் மீட்பு

(லண்டன்)

பிரித்தானியா நோக்கி படகுகளில் பயணித்த 99 அகதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

பாதுகலே கடற்பிராந்தியத்தியத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரித்தானியா சென்றவர்களே கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.




அன்றைய இரவில் பல்வேறு படகுகளில் அகதிகள் பலர் பிரித்தானியா நோக்கி பயணித்த நிலையில் அவர்களை கடற்படையினர் மீட்டு கப்பலில் ஏற்றிக்கொண்டு மீண்டும் கலே கடற்பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

அகதிகள் பயணித்த படகுகளில் 2 படகுகள் மிகுந்த சேதம் அடைந்திருந்ததாகவும், அதில் பயணித்தவர்கள் உயிராபத்தான நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிறந்த பாளி அறிஞர் தேவாநம்பிய ராஜாவை அசோகன் என அடையாளம் கண்டவர் - கா.இந்திரபாலா

ஆண்டு 1851. கொழும்பு அக்க டமியின் (இன்றைய ரோயல் கல்லூரி) பரிசளிப்பு விழா. ஒவ் வோர் ஆண்டிலும் மிகச்சிறந்த மாணவனாகச் சித்திபெறும் இளை ஞனுக்குக் கௌரவம்மிக்க ரேணர் பரிசு (Turnour Prize) வழங் கப்படும். 1851 இல் அப்பரிசு முத்து குமாரசுவாமி என்ற இளைஞனுக் குக் கிடைத்தது.

### முத்து குமாரசுவாமி

முத்து குமாரசுவாமி கொழும்பில் பிறந்த இளைஞர். அவருடைய தந்தையார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி முதலியார். பிரித் தானிய ஆளுநருக்குப் பிரதம தமிழ் மொழிபெயர்ப்பாளராக (Chief Tamil



லும்பினி அசோகன் கல்வெட்டு

Interpreter Mudaliyar to His Excellency the Governor) கடமை யாற்றிப் பின்னர் 1833 இல் அமைக் கப்பட்ட இலங்கைச் சட்டசபையின் தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட் டவர்.

முத்து குமாரசுவாமி பின்னர் பிரபல வழக்கறிஞராகவும் நிர்வாகி யாகவும் விளங்கி, விக்டோரியா மகாராணி வழங்கிய சேர்ப் பட்டத் தையும் (knighthood) பெற்றார். இப்பட்டத்தைப் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழர் இவரே.

பல மொழிகளைக் கற்ற அறிஞ ராகவும் விளங்கிய முத்து குமார சுவாமி, பௌத்த பாளி நூல்களாகிய தாடாவம்ஸ (Dathavamsa) மற் றும் ஸுத்தநிபாத (Sutta-nipata) ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். அதுவும் ஒரு காலம்! தமிழில் உள்ள தாயுமானவர் பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

இருபதாம் நூற்றாண்டில் பிரபல கலாவிமர்சகராகப் போற்றப்பட்ட ஆனந்த குமாரசுவாமியின் தந்தை முத்து குமாரசுவாமி என்பது குறிப் பிடத்தக்கது.

### ரேணர் பரிசு பெற்ற பிறர்

குமாரசுவாமி குடும்பத்தில் அடுத்த மூன்று தலைமுறைகளைச் சேர்ந் தோருக்கும் ரேணர் பரிசு கிடைத் தமை கவனிக்கத்தக்கது. முத்து குமாரசுவாமியின் சகோதரி மகன் பொன்னம்பலம் அருணாசலம் (பின்னர் சேர்ப் பட்டம் பெற்றவர்) 1868இலும் அருணாசலத்தின் மகன் மகாதேவா (பின்னர் சேர்ப் பட்டம் பெற்றவர்) 1903இலும் மகா தேவாவின் மகன் பாலகுமார் (பின்னர் பிரபல சிவில் சேவை நிர்வாகி) 1937இலும் ரேணர் பரிசைப் பெற்றனர்.

### யார் இந்த ரேணர்?

இளைய ஜோர்ஜ் ரேணர் (George Turnour Junior) யாழ்ப் பாணத்தில் பிறந்தவர். அவர் பிறந்த திகதி 1799 மார்ச் 11. அது யாழ்ப் பாணத்துக்கு ஆங்கிலேயர் வந்து ஆட்சியைத் தொடங்கிய காலம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவில் நடை பெற்ற போர்களின் விளைவாக ஒல்லாந்தர் ஆண்ட இலங்கையின் பாகங்கள், யாழ்ப்பாணம் உட்பட, ஆங்கிலேயர் கைக்கு மாறின. யாழ்ப் பாணத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வந்த பிரித்தானிய அதிகாரிகளுள் ஒருவராக ஜோர்ஜ் ரேணர் என்பவர் தன் படைப்பிரிவுடன் வந்து யாழ்ப்பாணக் கோட்டையில் 1795 இல் தன் அதிகாரப் பொறுப்பை ஏற்றார். இவர் பின்னர் ஒரு பிரெஞ் சுப் பெண்ணை மணம் முடித்துக் கோட்டையில் வாழ்ந்த காலத்தில் இவரது முதல் பிள்ளையாகப் பிறந்த வர்தான் இளைய ஜோர்ஜ் ரேணர் (தந்தைக்கும் மகனுக்கும் ஒரே பெயர்).

### இங்கிலாந்துக்குப் பயணம்

யாழ்ப்பாணக் கோட்டையில் பிறந்து வளர்ந்த இளைய ரேணர் தனது 12ஆவது வயதில், 1811 இல், உயர்பள்ளிப் படிப்புக்காக இங்கிலாந் துக்கு அனுப்பப்பட்டார். அங்கு பள்ளிப் படிப்பையும் பல்கலைக்கழகப் படிப்பையும் முடித்தபின், ரேணர் இலங்கைச் சிவில் சேவைப் பரீட்சை யில் தேர்ச்சிபெற்று 1820இல் இலங்கைக்குத் திரும்பி வந்தார்.

### மகாவம்ச மொழிபெயர்ப்பு

சப்ரகமுவ மாகாணத்தில் 1825 இல் இருந்து அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில், ரேணர் சிங்கள, பாளி மொழிகளை நன்கு கற்று, நாட்டின் வரலாற்றைக் கூறும் மகாவம்ச நூலைப் பற்றிக் கேள் வியுற்று, அதன் ஓலைப் பிரதி ஒன்றை அதிக சிரமத்துடன் தேடிப் பெற்று, 1836இல் அதன் பெரும் பாகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

பாளியில் எழுதப்பட்ட மகாவம்ச நூலை ஆங்கிலத்தில் முதல்முத லாக மொழிபெயர்த்தவர் ரேணர் ஆவர். இவர் மகாவம்சத்தை மொழிபெயர்த்துக்கொண்டிருந்த காலத்தில் ஓர் ஆங்கிலேயப் பாதிரி யாரும் பழைய சிங்கள வரலாற்று நூல்கள் சிலவற்றை மொழிபெயர்த் துக்கொண்டிருந்தார். அவர் பெயர் வில்லியம் பொக்ஸ் (Rev. William Fox).


பொக்ஸ் பாதிரியார் இலங்கையில் தன் கடமைகளை முடித்து ஓய்வு பெற்று இங்கிலாந்துக்குச் சென்றபின் 1833 இல் அவர் மொழிபெயர்த்த நூல்களாகிய மகாவம்ச, ராஜரத் னாகரய மற்றும் ராஜாவளிய ஆகி யவை லண்டனில் அச்சிடப்பட்டன. அவருடைய மொழிபெயர்ப்பு சிங்கள மகாவம்சத்தின் மொழிபெயர்ப்பு என்பது கவனிக்கத்தக்கது. இத னால், மூல நூலாகிய பாளி மகாவம் ஸத்தை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ரேணர் ஆவர்.

### பிராமி எழுத்து

மகாவம்சத்தை இலங்கையில் ரேணர் மொழிபெயர்த்துக் கொண்டி ருந்த காலத்தில், வடஇந்தியாவிலும் வரலாற்றாய்வில் ஈடுபாடு கொண் டவர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஊட் டும் நிகழ்ச்சிகள் சில நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இந்தியாவின் வெவ்வேறு பகுதி களில் ஆங்கிலேயர் நிர்வாகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த இளம் பிரித்தானிய அதிகாரிகள் பலர் நாட்டில் பரவலாக இருந்த தொன் மையான கல்வெட்டுக்களைக் கண் டனர். இவற்றின் பொருளை அறிய ஆவலுடையோராய் இந்தியப் பண் டிதர்களைக் கேட்டபோது எவருக்கும் அவற்றைப் படிக்கத் தெரியவில்லை. சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட எழுத்தில் பல இடங்களில் பாறைகளிலும் பெருந்தூண்களிலும் தெளிவாக வெட்டப்பட்ட நீண்ட கல்வெட்டுக்கள் ஜேம்ஸ் பிரின்ஸெப் (James Princep) என்ற ஆங்கிலேய இளை ஞரின் கவனத்தை ஈர்த்தன.


இக்கல்வெட்டுக்களின் எழுத்தை நாம் இன்று பிராமி என்று கூறு வோம். இப்பழைய கல்வெட்டுக் களை நாம் இன்று அசோகப் பேரர சனின் கல்வெட்டுக்களாக அறிவோம். பிரின்ஸெப் எடுத்த விடாமுயற்சியின் பயனாக பிராமி எழுத்தை வாசிக்க முடிந்தது. அது இன்னொரு சுவை யான கதை. பிரின்ஸெப் தனக்குக் கிடைத்த கல்வெட்டுப் பிரதிகளைத் தாமதமின்றிப் படித்து, அவற்றின் பொருளை வெளியிட்டார். ரேணர் மகாவம்ச மொழிபெயர்ப்பை வெளி யிட்டு ஒரு சில மாதங்கள் செல்லு முன், 1837இல், பிரின்ஸெப் பிராமி



எழுத்தைப் படித்து இந்திய வரலாற் றாய்வுக்குப் பெரும் தொண்டு செய் தார். இருவரும் ஒரே ஆண்டில் பிறந் தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

### தேவாநம்பிய பியதஸி ராஜா

பிரின்ஸெப் வாசித்த பிராமிக் கல்வெட்டுக்களில் மன்னன் பெயர் தேவாநம்பிய பியதஸி ராஜா என்று காணப்பட்டது. (இக்கட்டுரையில் சிறிய படத்தில் நான்கு வேறுபட்ட இடங்களில் உள்ள அசோகன் கல்வெட்டுக்களில் காணப்படும் தேவாநம்பிய பியதஸி என்ற பெய ரைப் பார்க்கலாம்: வரி 1 லும்பினி,



2 ராம்பூர்வ, 3 தில்லி தோப்ரா, 4 அல்லாஹாபாத். பெரிய கல்வெட் டுப்படம் நேபாளத்தில் புத்தர் பிறந்த லும்பினியில் அசோகன் எழுப்பிய பெருந்தூணில் உள்ள கல்வெட்டு. மூன்றாவது படம் லும்பினியில் உள்ள அசோகன் தூண்.)

புராணங்களில் கொடுக்கப்பட்ட ஆதிகால மன்னர்களின் பட்டியல் களைப் பார்த்தபோது பியதஸி என்ற பெயருடன் எவரையும் காணமுடிய வில்லை. இதனால் மன்னனை அடையாளம் காண்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது.

இலங்கையில் ரேணருடைய மகாவம்ச மொழிபெயர்ப்பின் மூலம் 'தேவாநம்பிய'என்ற பெயருடைய ஒரு மன்னன் (திஸ்ஸ மன்னன்) அநுராதபுரத்தில் ஆண்டதைப் பிரின் ஸெப் அறிந்திருந்தார். வேறு எவருக்கும் அப்பெயர் இருந்ததாக அவருக்குத் தெரியவில்லை.

ஆகவே, அநுராதபுரத்தின் திஸ்ஸ மன்னன் தான் பௌத்த மதத்தில் கொண்டிருந்த பற்றின் விளைவாக, அம்மதத்தின் கருத்துக்களைப் பரப்புவதற்கு இந்தியாவின் பல்வேறு இடங்களில் இக்கல்வெட்டுக்களைப் பொறிப்பித்திருக்கலாம் என்ற கருத்தை பிரின்ஸெப் வெளியிட்டார்.

### ரேணரின் பதில்


இலங்கையில் இருந்து ரேணர் இதற்குப் பதிலளித்தார். தேவா நம்பிய பியதஸி ராஜா அநுராத புரத்து மன்னன் அல்லன் என்றும் அவன் இந்தியப் பேரரசனாகிய அசோகன் என்றும் ரேணர் எடுத் துரைத்தார். பாளி நூலாகிய தீப வம்ஸ நூலில் அசோகனுக்குப் பியதஸ்ஸி என்ற பெயர் கொடுக் கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட் டினார்.

இது சரியென்பது பின்னர் கிடை த்த அசோகன் கல்வெட்டுக்கள் மூலம் தெரியவந்துள்ளது. கர்நாட கத்தில் மாஸ்கி என்ற இடத்தில் 1915இல் கண்டறியப்பட்ட அசோகன் கல்வெட்டில் 'தேவாநம்பிய அசோக' என்றும் பின்னர் குஜர்ரா என்ற இடத்தில் கிடைத்த அசோகன் கல்வெட்டில் 'தேவாநம்பிய பியதஸி அசோக ராஜா'என்றும் மன்னன் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் ரேணருக்கு முன் 1833இல் பொக்ஸ் பாதிரியார் மொழிபெயர்த்து வெளியிட்ட சிங்கள நூல்கள் வழியாகவும் அசோக னுக்குப் பியதஸ்ஸி என்ற பெயர் இருந்தது வெளிப்படுத்தப்பட்டிரு ந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்கவும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி அறிவக அலுவலகத்தில் விஜயதசமியை முன்னிட்டு நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் சிறுவர்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (படம்:- தேவானந்தன்)



போதனா மருத்துவமனை தாதிய பயிற்சி கல்லூரியில் சரஸ்வதி பூஜையின் பின்னர் சிறுவர்களுக்கான வித்தியாரம்ப நிகழ்வு யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியால் முன்னெடுக்கப்பட்டது.

(படம்: சிவசாந்தன், மகாலிங்கம்)



யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சரஸ்வதி பூஜை வழிபாட்டில் விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், சுங்கத்துறையினர், விமானப் படையினர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(படம்: சிவசாந்தன்)



சாவகச்சேரிப் பிரதேசசபை வரணிப் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வாணி விழாவும் அதனை ஒட்டிய கோலப்போட்டி நிகழ்வும் நூலக வளாகத்தில் இடம்பெற்றன.

(படம்: சுபேசன்)

# யாழ்ப்பாணத்தில் பிறந்த பாளி அறிஞர் ...

(10 ஆம் பக்க தொடர்ச்சி..)


அசோகன் கல்வெட்டுக்கள் பிரின்ஸெப் அறிஞரால் வாசிக்கப்பட்ட போது பொக்ஸ் பாதிரியார் இறந்து சில ஆண்டுகளாகிவிட்டது. அவர் எழுதிய முக்கிய தகவலை எவரும்அப்பொழுது கவனிக்கவில்லை.

இதனால், பியதஸ்ஸி ராஜாவை அசோகன் என அடையாளம் கண்ட சிறப்பு ரேணருக்குக் கிடைத்தது.

### தேவாநம்பிய

தேவாநம்பிய என்ற விருதுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இது தேவாநம்+பிய என்ற இரு சொற்களைக்கொண்டது தேவர்களால் விரும்பப்படுபவர் என்ற பொருளைக் கொடுக்கும். தேவாநம்பிய என்பது அசோகன் கல்வெட்டுகளின் பிராகிருத மொழியிலும் பாளி மொழியிலும் காணப்படும் வடிவம். சம்ஸ்கிருதத்தில் இது 'தேவாநாம் + ப்ரிய என வரும். ஆதி இலங்கையின் பிராகிருதத்தில் 'தெவனபிய'எனவும், பின்னர் ஹெள (ஆதிச் சிங்கள) மொழியில் 'தெவணபா'எனவும் வரும்.


இந்த விருதினை அசோகனும் திஸ்ஸ மன்னனும் மட்டுமல்லாது, இவர்களுக்கு முன்னரும் பின்னரும் பல மன்னர்கள் பயன்படுத்தியுள்ளனர். அசோகனின் பேரனாகிய தசரத மன்னன் இவ்விருதினைப் பெற்றிருந்தான். இலங்கையில் திஸ்ஸ மன்னனுக்குப் பின் பல மன்னர்கள் இதனைப் பயன்படுத்தினர். அசோகன் காலத்தில் பொதுப்பட மன்னரைக் குறிக்கும் சொல்லாகவும் இது பயன்பட்டது. அசோகனின் கல்ஸிக் கல்வெட்டில் தேவாநம்பியர்கள் என்று பன்மையில் 'மன்னர்கள்'என்பதுக்குப் பதிலாக இது வருகின்றது.



DE VA NAM PI YA SA A SO KA

### வானவர் அன்பன்

தேவாநம்பிய என்பதற்கு ஒரு பொருத்தமான, அழகான தமிழ்




மொழிபெயர்ப்பு வானவர் அன்பன் என்பதை மறுக்க முடியாது. இமயவர் அன்பன் என்பதும் அவ்வாறே. வட இந்திய மன்னர்கள் தேவாநம்பிய எனச் சூடிய விருதைச் சேர மன்னர்கள் வானவர் அன்பன், இமயவர் அன்பன் எனப் பெயர்த்துச் சூடினர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்விருது பின்னர் வானவரம்பன், இமயவரம்பன் எனத் திரிபடைந்தது எனத் தோன்றுகிறது.

### எகிப்தில் இருந்து இலங்கை வரை

மண்ணுலக மன்னர்கள் தாங்கள் விண்ணுலகத் தேவர்களால் விரும்பப்படுபவர்கள் என்று அறிவிக்கும் விருதுகளைச் சூடிக்கொள்ளும் வழக்கம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து மன்னர்களால் தொடக்கப்பட்டது. பின்னொரு காலத்தில் அவர்களை வெற்றிகொண்ட மேற்காசியப் பாரசீக மன்னர்கள் தங்களையும் அவ்வாறே தேவர்கள் அன்பைப் பெற்றவர்கள் என்ற விருதைப் பயன்படுத்தினர்.

பின்னர் பாரசீகப் பண்பாட்டின் செல்வாக்கு வடமேற்கு இந்தியாவை வந்தடைந்தபோது இப்படியான ஒரு விருது, அதாவது தேவாநம்பிய என்ற விருது இந்தியாவின் மகதப் பேரரசின் மன்னர்களால் சூடப்பட்டது. அங்கிருந்து அவ்விருது தமிழ் நாட்டில் வானவர் அன்பன் / இமயவர் அன்பன் என்றும் இலங்கையில் தெவணபிய என்றும் மாறியது.

இப்படியான விருது வழக்கற்றுப் போனமை வியப்புக்கு உரியதல்ல. ஒரு மன்னன் தன்னைத் தேவர்களின் அன்பன் என்று கூறிக்கொள்வது தென்ஆசியாவில் வளர்ந்த சமயத் தத்துவங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை.

மாறாக, தன்னைத் தேவர்களின் அடியான் என்று சொல்வதே விரும்பத்தக்கதாக இருந்தது எனலாம். தம்மை வானவர் அன்பர் என்று மன்னர் கூறிக்கொண்ட சேர நாட்டில், பின்னர் ஐயன் அடிகள் என்று பெருமையுடன் சொல்வது விரும்பத்தக்கதாகியது. அதற்கும் பின்னர், அண்மைக்காலத்தில், அதே சேரநாட்டில் 'பத்மநாபதாஸ' என்று திருவிதாங்கூர் மன்னர் விருது ஒன்றைச் சூடினர்.

பௌத்த அரசுகளில் 'புத்ததாஸ' (புத்தர் அடியான்) என்பது விரும்பத்தக்கதாகியது. இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் அநுராதபுரத்தில் ஆண்ட ஒரு பௌத்த தமிழ் மன்னன் (கல்வெட்டில் வரும் பெயர்: ள பரி தெவ = இளம் பாரி தேவன்) 'புத தஸ' (புத்த தாஸ = புத்தர் அடியான்) என்ற விருதைப் பெற்றிருந்தான். இவனுக்கு முன்னரும் அநுராதபுரத்து மன்னர்கள் இவ்விருதைச் சூடியிருந்தனர்.

தேவர்களின் அன்பர்களாக இருந்த நிலை மாறி மன்னர்கள் தேவர்களின் அடியார்களானார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 318





அந்தக் காட்சியைக் கண்டு ஜனசமுத்திரம் பொங்கிப் பூரித்து ஆரவாரித்தது. ஆனால் வெளியில் இவ்வாறு ஒரே உற்சவ உற்சாகக் குதூகலமாயிருந்தபோது, அந்த இரண்டு பூரண சந்திரர்களுடைய இதயப் பிரதேசங்களிலும் எரிமலைகள் பொங்கி அக்கினிக் குழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. பழுவூர் இளையராணிக்கும் பழையாறை இளையபிராட்டிக்கும் ஓயாமல் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சொல்லம்புகளைக் கொண்டும் விழிகளாகிற வேல்களைக் கொண்டும் அவ்விரு அழகிகளும் துவந்த யுத்தம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் போராட்டத்தில் இரு பக்கமும் கூருள்ள வாள்கள் ஒன்றோடொன்று உராய்ந்தபோது தீப்பொறிகள் பறந்தன. தீட்டிச் சாணை பிடித்த ஈட்டிகள் ஒன்றையொன்று தாக்கி ஜுவாலை வீசின. இருண்டவான வெளியில் இரண்டு மின்னல்கள் ஒன்றையொன்று வெட்ட, இரண்டும் சேர்ந்து துடிதுடித்தன. கொடிய அழகு வாய்ந்த இரண்டு பெண் புலிகள் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கால் நகங்களினால் பிறாண்டி இரத்தம் கசியச் செய்தன. பயங்கரச் சௌந்தரியம் பொருந்திய இரண்டு நாகசர்ப்பங்கள் படம் எடுத்து ஆடி அவற்றின் கூரிய மெல்லிய சிவந்த நாக்குகளை நீட்டி ஒன்றையொன்று விழுங்கி விடப்பார்த்தன.

இந்த அதிசயமான போராட்டத்தில் அவர்கள் உற்சாக வெறியும் அடைந்தார்கள் வேதனைப்பட்டு உள்ளம் புழுங்கியும் துடித்தார்கள்.

நகர மாந்தர்களின் உற்சாகத்திலும் கலந்து கொள்ளாமல், இந்த இரு சந்திரமதிகளின் போராட்டத்தையும் புரிந்து கொள்ளாமல், ஒரே ஒரு ஆத்மா தவித்துக் கொண்டிருந்தது. கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு இப்போதெல்லாம் இளையபிராட்டியுடன் பேசுவதற்கே அவகாசம் கிடைக்கவில்லை. அக்காளுடன் கூடக் கூடப் போனாளே தவிர வெளியில் நடப்பது ஒன்றிலும் அவள் மனம் ஈடுபடவில்லை. தனக்குள்ளே ஒரு தனிமை உலகைச் சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே சஞ்சரித்து வந்தாள்.

### பதினைந்தாம் அத்தியாயம்
### இரவில் ஒரு துயரக் குரல்

சோழ நாட்டில் அக்காலத்தில் ஆடல் பாடல் கலைகள் மிகச் செழிப்படைந்திருந்தன. நடனமும் நாடகமும் சேர்ந்து வளர்ந்திருந்தன. தஞ்சை நகர் சிறப்பாக நாடகக் கலைஞர்கள் பலரைத் தோற்றுவித்தது. அந்த நாளில் வாழ்ந்திருந்த கருவூர்த் தேவர் என்னும் சிவநேசச் செல்வர் 'இஞ்சி சூழ்' தஞ்சை நகரைப் பற்றிப் பாடல்களில் கூறியிருக்கிறார்.

"மின்னெடும் புருவத்து இளமயிலனையார்
விலங்கல் செய நாடக சாலை இன்னடம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை"

என்று அவருடைய பாடல்களில் ஒன்று வர்ணிக்கிறது. தஞ்சை நகரில் நாடகக் கலை ஓங்கி வளர்ந்ததற்கு அறிகுறியாக நாடகசாலைகள் பல இருந்தன. அந்த நாடகசாலைகளில் எல்லாம் மிகச் சிறந்த நாடக சாலை சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள்ளேயே இருந்தது.

புதிய புதிய நாடகங்களைக் கற்பனை செய்து அமைக்கும் கலைஞர்கள் தஞ்சை நகரில் வாழ்ந்து வந்தனர். அதற்கு முன்னாலெல்லாம் புராண இதிகாச காவியங்களில் உள்ள கதைகளையே நாடகங்களாக அமைத்து நடிப்பது வழக்கம். சில காலமாகத் தஞ்சை நாடகக் கலைஞர்கள் வேறொரு துறையில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருந்தார்கள். சரித்திரப் புகழ் பெற்ற வீரர்களின் வரலாறுகளை அவர்கள் நாடகமாக அமைத்தார்கள். அவர்களுடைய காலத்துக்குச் சிறிது முற்பட்டவர்களின் வீரக் கதைகளையும் நாடகங்களாக்கி நடித்தார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் சோழ வம்சத்தில் பிறந்தவர்களைப் போல வேறு எங்கே உண்டு? ஆகையினால் கரிகால் வளவர், விஜயாலய சோழர், பராந்தக தேவர் முதலிய சோழ வம்சத்து மன்னர்களின் சரித்திரங்களை நாடகங்களாக்கி நடித்தார்கள்.

நவராத்திரித் திருநாளில் சக்கரவர்த்தியின் அரண்மனையில் சோழ வம்சத்து மன்னர்களின் வீர சரித்திர நாடகம் மூன்று நாட்கள் நடைபெற்றன.

(தொடரும்...)

---

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## குற்றத்தை ஒப்புக்கொண்ட காந்தி

காந்தி சிறுபையனாக இருந்தபோது தன் நண்பர்களுடன் களிமண்ணில் செய்த சுவாமி விக்கிரகங்களை வைத்து விளையாடுவார். ஒரு சமயம் அவர்களுக்கு யோசனை வந்தது. நாம் எதற்காக களி மண்ணால் செய்யப்பட்ட விக்கிரகங்களை வைத்து விளையாட வேண்டும். கோவிலில் உள்ள விக்கிரகங்களை எடுத்து வந்து அவற்றை வைத்து விளையாடினால் என்ன? என அவர்களுக்குத் தோன்றியது.

"சந்து" என்ற சிறுவன் கோவிலுக்குப் போய் அவன், தான் யாருக்கும் தெரியாமல் விக்கிரகங்களைக் கொண்டுவர வேண்டும் என்று தீர்மானித்தான். அதன்படி பூசகர் தூங்கிக் கொண்டிருந்த சமயம் சத்தம் கேட்ட பூசாரியின் மனைவி வெளியே வந்தாள். பூசாரியும் மனைவியும் சந்துவைத் துரத்தத் தொடங்கினர். அவன் விக்கிரகங்களை கீழே போட்டுவிட்டு ஓடத் தொடங்கினான்.

அதேசமயம் காந்தியும் மற்றைய நண்பர்களும் ஓட்டம் பிடித்தனர். பூசகர் எல்லோரையும் விசாரித்தார். எல்லோரும் உண்மை கூற மறுத்தனர். அதேசமயம் காந்தி அவ்வீதியால் வந்தார். பையன்களை அடிக்காதீர்கள். நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து தான் விக்கிரகத்தை திருடத் தீர்மானித்தோம் நாங்கள் எல்லோரும் "குற்றவாளிகள்" என்று காந்தி உண்மையைக் கூறினார்.

---

## உலகம் உங்களை விரும்ப

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்கத் தவறாதீர்கள்.

தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்

உண்மையானாலும் பொய்யானாலும் முதலில் நீங்கள் எதையும் வெளியிடாதீர்கள்.

முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் எனச் சொல்லாதீர்கள்.

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய்நிறைய எவரையும் வரவேற்றுக் கொள்ளுங்கள்.

பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்.

அரைகுறை நண்பாரானாலும் அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.

குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்.

வி.ஐங்கரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.
> – தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ‘சி’ னாக்களின் சூழ்ச்சியே சீனக் கப்பலின் வருகை

“சி” னாக்கள் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் துரியோதனனின் மாமன் சகுனி போல் சிந்திப்பவர்கள். செயலாற்றுபவர்கள்.

இந்த இயல்பு அவர்களிடம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

மிகப்பெரும் கல்விமானான சேர் பொன். இராமநாதன் அவர்களை சாதாரண கல்வியைக் கற்ற டி.எஸ்.சேனநாயக்க ஏமாற்றினார் என்ற வரலாறு நாம் அறிந்ததே.

இதேபோன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியப் பிரதமராக இருந்த ராஜிவ் காந்தியை மிக நுட்பமாக ஏமாற்றி தனது காரியத்தை கச்சிதமாகச் சாதித்துக் கொண்டார்.

இவ்வாறு பல உதாரணங்களைக் கூற முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மகிந்த ராஜபக்ஷக்களின் உபசரிப்பில் ஏமாந்து போனார்.

அதிலும் அவரை எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ அனுமதித்ததில் நெகிழ்ந்துபோன இரா.சம்பந்தர் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி இம்மியும் சிந்திக்காமல் அரசியல் அனுகூலங்களை அனுபவிக்கலானார்.

ஏன்? இப்போது ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை உடைக்கும் பொருட்டு அதற்குள் பிரதேசவாத சிந்தனையை தூண்டிவிட, எங்களை நாங்களே காட்டிக் கொடுக்கின்ற கயமையைச் செய்ய வேண்டியதாயிற்று.

இவ்வாறாக “சி”னாக்கள் தங்களின் சகுனித்தனங்களை அவ்வப்போது செய்து இக்கட்டான சூழ்நிலைகளை வெற்றி கொண்டு வருகின்றனர்.

இதில் முக்கியமான விடயம்தான் சீனாவின் ஆய்வுக்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவதற்கான அனுமதியும் ஏற்பாடு மாகும்.

ஆம், சீனா இந்தியாவின் பரம எதிரி. சீன – இந்திய எல்லையில் இப்போதும் முறுகல் நிலை இருந்து கொண்டே இருக்கிறது.

தவிர, இந்தியாவுடன் போர் புரிவதை நோக்கமாகக் கொண்டே சீனாவின் படைபல நடவடிக்கைகள் நடந்தாகின்றன.

அதேநேரம் இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற ஒரே அண்டை நாடு இந்தியா மட்டுமே.

ஆக, இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இலங்கைக்கு இந்தியா கொடுக்கக் கூடிய அழுத்தத்துக்கு நேரடியாக தனது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாத இலங்கை அரசாங்கம், சீனாவின் கப்பலை தனது நாட்டுக்குள் அனுமதித்ததன் மூலம் தனது எதிர்ப்பை – பகையை இந்தியாவுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

ஆம், பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது இந்தியாவின் உதவியைப் பெற்ற இலங்கை, ஈற்றில் இந்தியாவுக்கு விருப்பமில்லாத வேலையை மிகக் கச்சிதமாகச் செய்துள்ளதெனும்போது, “சி”னாக்களின் சகுனித்தனம் எவ்வாறானதென்பதைப் புரிந்து கொள்வதில் கடினமிருக்க முடியாது.

## நாட்டில் சட்டக்கட்டமைப்பு சீர்குலைவு

# மக்கள் பணத்தில் சிறையில் சுகபோகம் காணும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் கடும் விசனம்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பொதுமக்கள் பணத்தில் சிறைகளில் பராமரிக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

கம்பஹா, மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான சிங்கப்பூர் சட்டங்கள் இங்கும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

இதில் பிரதான பெரும் வியாபாரிகளாக உள்ளவர்கள் பொதுமக்கள் பணத்தில் சிறைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இது ஈஸி கேஷ் (EZ Cash) முறையில் இயங்கினாலும், தற்போதைய அரசாங்கத்திடம் இதற்கு தீர்வு இல்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் சிங்கப்பூரின் தண்டனை முறை வழங்கப்படும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களை காப்பாற்ற தற்போது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதைப்பொருள் பயங்கரவாதம் என்பதால், இதனை கட்டுப்படுத்த விசேட படைப்பிரிவு அவசியம்.

நாட்டின் சட்டக் கட்டமைப்பு கூட தற்போது சீர்குலைந்துள்ளதால், இதற்கு நாம் முதுகெலும்பை நேராக வைத்துக்கொண்டு சட்ட ஒழுங்கை வலுப்படுத்த ஒரு நாடாக ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# திருமலையை பௌத்த மாவட்டமாக மாற்றிடும் செயற்பாடுகள் தீவிரம்

### சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

திருகோணமலையை பௌத்த மாவட்டமாக மாற்றுகின்ற நீண்ட கால திட்டம் இப்பொழுது துரித கதியில் இடம்பெற்றுவருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பணிமனையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

விஷேடமாக குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 30 க்கும் மேற்பட்ட புத்தர் சிலைகளும் வணக்கஸ்தலங்களும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 23 இடங்களில் வேலைகள் இடம்பெற்று வருகின்றது. பௌத்த மக்கள் வாழாத இடத்தில் கூட புத்தர் சிலைகளை நிர்ணயிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை கிழக்கு ஆளுநர் தடை விதித்தாலும் கூட பாதுகாப்பு பிரிவின் அனுசரணையுடன் விகாரை நிர்மான வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தும் மக்கள் இங்கே வருகை தந்து தங்களுடைய பல பிரச்சினைகளை எமக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள்

இதில் பிரதானமான பிரச்சினையாக நில அபகரிப்பு தொடர்பிலேயே பல குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இதேவேளை மூதூர் கங்குவேலி குளத்தை ஆக்கிரமித்து அந்தக் குளத்தை நம்பி விவசாயம் செய்கின்ற தமிழ் முஸ்லிம் மக்களுடைய விவசாய செய்கையை குழப்பும் நோக்கில் குளத்தில் காணப்பட்ட நீரை வெளியேற்றி குளத்துக்குள்ளேயே வேற்று இனத்தவர்கள் வருகை தந்து விவசாயம் செய்து வருகின்றனர்.

இது தொடர்பில் பல முறைப்பாடுகள் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டிருந்தும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை. நீர்ப்பாசன அதிகாரிகளிடம் முறையிடுமாறு பொலிஸார் கூறுவதாகவும் அவர்களிடத்தில் முறையிட்டும் எதுவித நடவடிக்கையையும் எடுக்கபடவில்லை என்றார். (ம-7)

## அமைச்சுக்களின் செயலாளர்களில்

# வினைத்திறனற்றோர் மாற்றம் கடமை தவறியோர் நீக்கம்

### ஜனாதிபதி ரணில் தீர்மானம்

(கொழும்பு)

வினைத்திறனின்றி செயற்படும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றம் செய்யப்படுவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் கவனம் செலுத்தியுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாற்றத்தின் கீழ் சில அமைச்சுக்களின் செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட உள்ளதோடு மக்கள் நலக் கொள்கைகளை முறையாக நடைமுறைப் படுத்தத் தவறிய சில அமைச்சின் செயலாளர்கள் நீக்கப்பட உள்ளனர்.

உரிய சேவை கிடைக்கவில்லை என அமைச்சின் செயலாளர்கள் தொடர்பில் பொதுமக்கள் அளித்த முறைப்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை படிப்படியாக மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் எடுத்துவரும் பொருளாதார மற்றும் சமூக நலன்புரி கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஆதரவளிக்காத அமைச்சின் செயலாளர்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இவை அனைத்தினையும் பகுப்பாய்வு செய்தே ஜனாதிபதி அமைச்சுக்களில் மாற்றம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-7)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

வீதியோரம் நடந்து சென்ற ஆண் ஒருவர் மற்றும் இரண்டு பெண்களை விபத்திற்குள்ளாக்கி மோட்டார் வாகனம் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.

எம்பிலிப்பிட்டிய மொரகெட்டிய பிரதான வீதியில் இலுக்கெட்டிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் எம்பிலிப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளனர்.

58 மற்றும் 71 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற மோட்டார் வாகனத்தின் சாரதியை தேடி விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

20

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



சில பிற்பட்ட சிங்கள மூலங்களை அடிப்படையாகக் கொண்டு கனகசூரிய சிங்கையாரியன் போரில் இறந்து விட்டதாகச் சிலர் கருதினாலும் வைபவமாலையினதும் வேறு சான்றுகளினதும் அடிப்படையில் அரசன் தப்பியோடினான் என்பதே பெரும்பான்மைக் கருத்தாக உள்ளது.

யாழ்ப்பாண வைபவமாலைக் கூற்றுப்படி, திருக்கோவிலூர் சென்ற கனகசூரியன், தனது இரண்டு ஆண் மக்களையும் கல்வி கற்பதற்காகத் திருக்கோவிலூரில் அரச குடும்பத்தினரிடம் சேர்ப்பித்து, தனது மனைவியுடன், காசி முதலிய தலங்களுக்கு யாத்திரை சென்றான். பல ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பி வந்த அரசன், போர்க் கலையிலும் கல்வியிலும் சிறந்தவர்களாகவும் இழந்த இராச்சியத்தை மீட்பதில் அக்கறை கொண்டவர்களாகவும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். அங்கிருந்து எல்லோருமாக மதுரைக்குச் சென்று, பாண்டிநாட்டுச் சிற்றரசர்களிடம் இருந்து ஆயுதங்களும் படைகளும் பெற்றுக் கொண்டு போருக்கு ஆயத்தமானார்கள்.

கோட்டை இராச்சியத்தில் 1460களின் பிற்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வுகளும் கனகசூரியசிங்கையாரியன் மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கின. ஆறாம் பராக்கிரமபாகு 1467இல் இறக்கு முன்னர், தனது மகள் வழிப்பேரன் செயவீர பரக்கிரமபாகுவுக்கு முடி சூட்டினான். இதை அறிந்த செண்பகப் பெருமாள், யாழ்ப்பாணத்தில் இருந்த தனது படைகளைத் திரட்டிக் கொண்டு, கோட்டை இராச்சியத்தின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டு ஸ்ரீசங்கபோதி புவனேகவாகு என்னும் பெயருடன் அரியணையில் அமர்ந்தான். இதைத் தொடர்ந்து கோட்டை இரச்சியத்தில் கலகங்கள் ஏற்பட்டதால் அவன் உடைய முழுக் கவனத்தையும் அங்கேயே செலுத்த வேண்டி ஏற்பட்டது.

### கனக சூரியன் யாழ்ப்பாணத்தை மீளக்கைப்பற்றுதல்

செண்பகப் பெருமாள் பற்றியோ, கோட்டை இராச்சியத்து நிகழ்வுகள் பற்றியோ வைபவமாலை எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக, விஜயபாகு என்னும் சிங்களவன் தானே அரசன் எனத் தலைப்பட்டுப் 17 ஆண்டுகள் அரசாண்டதாகக் குறிப்பிடுகிறது. படைகளுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்த கனகசூரியனும் அவனது மகன்களும் விஜயபாகு எதிர்பாராத வகையில், மேற்கு வாசல் வழியாக நல்லூருக்குள் நுழைந்ததாகவும் அங்கே கடுஞ்சண்டை இடம்பெற்று விஜயபாகு கொல்லப்பட்டான் என்பதும் வைபவமாலையின் கூற்று. விஜயபாகு என்பவன், செண்பகப் பெருமாள் கோட்டைக்குச் செல்வதற்கு முன்பு, யாழ்ப்பாணத்தை ஆள நியமிக்கப்பட்டவன் ஆகலாம் என்ற கருத்தும் உண்டு.

### போரின் விளைவுகள்

இப்போரின் முக்கியமான விளைவு, யாழ்ப்பாணம் கோட்டை இராச்சியத்தின் பிடியில் இருந்து விடுபட்டு மீண்டும் தமிழ் மன்னர்களின் ஆளுகைக்குள் வந்தது எனலாம். அத்துடன், போருக்குப் பின்னர், கோட்டை இராச்சியத்துக்கு ஆதரவாக இருந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல சிங்களக் குடிகள் யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கிக் கண்டி, கோட்டை போன்ற இராச்சியப் பகுதிகளில் குடியேறின. சிலர் கருதுவது போல் ஆரியச் சக்கரவர்த்தி வம்சத்தின் ஆட்சி முடிந்து போயிருந் தால், புதிய அரசமரபின் தொடக்கமாகவும் இது இருக்கக்கூடும்.

### பரராசசேகரன் சிங்கையாரியன் (1478-1519)

சிங்கைபரராசசேகரன் என்பவன் கிபி 1478 முதல் 1519 வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் ஆவான். சிங்கை பரராசசேகரன் சிறுவனாக இருந்தபோது இவனது தந்தையாகிய கனகசூரிய சிங்கையாரியன் பகைவனான சப்புமால் குமாரயாக்கு அஞ்சி தொண்டை நாட்டில் இருக்கும் திருக்கோவலூர்க்கு இவனோடும் இவன் தம்பியோடும் மற்றும் பிற உறவினரோடும் தப்பிச் சென்று வாழ்ந்து வந்தான். திருக்கோவலூரில் வாழ்ந்த காலத்தில் கனகசூரிய சிங்கையாரியன் தனது மைந்தருக்கு தொண்டைமண்டலப் புலவன் ஒருவன் மூலம் தமிழ் கற்பித்தான் என்பர். 17 ஆண்டுகள் கழித்து கனகசூரிய சிங்கையாரியன் தனது மகன்களோடு சேர்ந்து படை திரட்டி வந்து, யாழ்ப்பாணத்தை மீட்டு மீண்டும் 1467 ஆம் ஆண்டு அரசன் ஆனான். 11 ஆண்டுகள் அரசு புரிந்து கனகசூரியசிங்கையாரியன் இறந்தபோது சிங்கை பரராசசேகரன் அரசன் ஆனான்.

சப்புமால்குமாரயாவின் சிங்களப் படைகள் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த காலத்தில் தமிழரின் செல்வத்தை சூறையாடியும் மற்றும் போர்க்காலத்தில் கோவில்கள், கோட்டைகள் மற்றும் துறைமுகங்கள் போன்றவற்றுக்கு பெரும் சேதம் விளைவித்தனர் என்பது, சப்புமால் குமாரயா தமிழரை வென்றதை, பௌத்த பிக்கு ஒருவரால் சிங்களத்தில் புகழ்த்து பாடப்பட்ட கோகிலாஸந்தோஸய (குயில் விடு தூது) என்னும் நூல் கூறுகின்றது.

சிங்களத்தினால் யாழ்ப்பாண தமிழ் அரசுக்கு விளைவிக்கப்பட்ட சேதங்களை திருத்தி மிண்டும் பொலிவுறச் செய்தவன் சிங்கை பரராசசேகரனே. இவன் அரசு கட்டிலேறிய கணத்தில் இருந்தே யாழ்ப்பாண அரசின் நலனை காப்பதில் மிக தீவிரமாக இருந்து வந்தான் என்பர். யாழ்ப்பாண அரசின் வருவாயை பெருக்கிக் கொள்ளும் பொருட்டு மாந்தை, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களை புதுப்பித்து மீண்டும் பிற நாடுகளோடு வணிகம் இடம்பெற வழிவகுத்தான். கடல் வழி வணிகத்தையும் யாழ்ப்பாண அரசுக்கு பெரும் வருவாயிட்டித் தரும் மன்னார் முத்துக் குளிக்கும் கடற்பரப்பையும் பாதுகாக்கும் வண்ணம் கடற்படையை மேல் கூறிய துறைமுகங்களில் நிறுத்தி வைத்தான். மேலும் சிங்கள அரசுகளால் வரக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் வண்ணம் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு தரைப்படைகளை புத்தளம், மாந்தை, திருகோணமலை மற்றும் வன்னி போன்ற இடங்களில் அரணமைத்து நிறுத்தி வைத்தான். மிகக் குறுகிய காலத்தில் இராணுவ மற்றும் பொருளாதார ரீதியில் யாழ்ப்பாண அரசை கட்டியெழுப்பி சாதனை நிகழ்த்தியது மட்டுமின்றி தமிழ்த் தொண்டாற்றி யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சி அடைவதுக்கு வித்திட்டதும் இவனே ஆகும்.

### தமிழ்த்தொண்டு

திருக்கோவலூரில் வாழ்ந்த காலத்தில் 14 ஆண்டுகள் ஒரு புலவரிடம் தமிழ் கற்று இவனும் இவன் தம்பியாகிய சிங்கை செகராசசேகரனும் தமிழில் புலமை எய்தினர் என்பர். இவனும் இவன் தம்பியும் தமிழை வளர்க்கும் பொருட்டு முதல் யாழ்ப்பாண தமிழ் சங்கத்தை நிறுவினர். மேலும் பல பாடசாலைகளை உருவாக்கி கல்வியறிவை யாழ்ப்பாணத்தில் பரப்பினர். சப்புமால் குமாரயாவினால் அழிக்கப்பட்ட சரசுவதிமகாலயம் என்னும் நூலகத்தை புதுப்பித்து யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நிறுவி இதற்கு வேண்டிய நூல்களை வடகரையில் இருந்து பெறும் பொருட்டு இராமேஸ்வரத்தில் படி எழுதும் பட்டறைகள் பல நடத்தினர் என்பர். இங்கு தமிழ் மற்றும் வடமொழியில் படியெடுக்கப்பட்ட பல ஆயிரம் அரிய நூல்கள் சரசுவதிமகாலயம் என்னும் புதிய நூலகத்தில் சேகரித்து வைக்கப்பட்டன.

இந்நூலகம் கவி அரங்கேற்றிப் பரிசில் பெறும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்த புலவர் பெருமக்களுக்கு பெரிதும் உதவியது என்று கூறுவர். தமிழ்க் கடவுளாகிய முருகனைப் பாடிய அருணகிரிநாதர் யாழ்ப்பாணம் வந்த போது பாடியதாக கூறப்படும் திருப்புகழ்கள் பல இங்கு வைக்கப்பட்டிருந்தன. சிங்கை பரராசசேகரனும் கவிபாடுவதில் மிகுந்த ஆற்றலுடையவனாக இருந்தான். இவனும் சில ஆயிரம் தனிநிலைச் செய்யுள்களை பாடி உள்ளான். அவைகளும் இந் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. மிகமிக அரிய நூல்களை அதீதம் கொண்டிருந்த இந்த நூலகம் மிக துயரமான வகையில் 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் தாக்குதலில் அழிக்கப்பட்டது. இவனால் கூறப்பட்ட செய்யுள்கள் சில இக்காலத்தில் கிடைத்துள்ளன.

இவன் தனது தம்பியாகிய சிங்கை செகராசசேகரனோடு சேர்ந்து தமிழ்க் கல்விக்கு மட்டுமின்றி வேறு துறைகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டனர். குறிப்பாக மூலிகை மருத்துவத்துறை வளரும் பொருட்டு, சிறந்த மூலிகை மருத்துவனான சிங்கை செகராசசேகரனோடு சேர்ந்தது, யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 45 ஏக்கர் நிலத்தில் மூலிகை மருத்துவ தோட்டத்தோடு கூடிய மூலிகை மருத்துவ நிலையம் ஒன்றை நிறுவினான்.

### குடும்ப வரலாறு

இவனது தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்வுகள், பிற்காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் குடியுள் நடந்தேறிய துயர நிகழ்ச்சிகளுக்கும் குழப்பங்களுக்கும் வழிவகுத்தது எனலாம். இவனுக்கு இரு மனைவிகளும் ஒரு ஆசைநாயகியும் இருந்தனர். மனைவிகளில் மூத்தவரும் பட்டத்து ராணியுமாக இருந்தவர் இராஜலச்சுமி அம்மையார். இவர் சோழ குடியில் தோன்றியவர் என்பர். சோழப்பேரரசு 13 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சி அடைந்த பின் அக்குடியை சேர்ந்தவர்கள் சிலர் தமிழகத்தில் சில இடங்களில் குறுநில மன்னராய் திகழ்ந்தனர் என்பதை தமிழக வரலாறு கூறும். இது போன்ற ஒரு சோழ குறு நில அரசகுடியில் இராஜலச்சுமியம்மையார் இளவரசியாக பிறந்தார் போலும். இவருக்கு சிங்கவாகு, பண்டாரம் என இரு மைந்தர்கள் இருந்தனர்.

சிங்கை பரராசசேகரனின் இரண்டாவது மனைவியாகவும் இளைய ராணிாகவும் திகழ்ந்தவர் வள்ளியம்மையாராவார். இவர் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த பிரபுத்துவ மரபாகிய பாண்டி மழவன் வழித் தோன்றிய அரசகேசரியின் மகளாவார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 அத்தியாவசிய...

ரூபாய்.

உழுந்து ஒரு கிலோ - 06 ரூபாயி னால் குறைப்பு புதிய விலை 549 ரூபாய்.

பருப்பு ஒரு கிலோ 05 ரூபாயினால் குறைப்பு புதிய விலை 295 ரூபாய்.

சிவப்பு அரிசி ஒரு கிலோ 03 ரூபாயி னால் குறைப்பு புதிய விலை 169 ரூபாய்.

இதன்படி குறித்த விலை குறைப்பு இன்று முதல் அமுலுக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கூட்டணி அரசி...

ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கூட்டணி அரசாங்கமொன்றில், ஏதேனும் முக்கியமான தீர்மான மொன்று எடுக்க வேண்டுமாக இருந் தால் கட்சித் தலைவர்களுடன் கலந் தாலோசிக்கப்படும்.

ஆனால், கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் கலந் தாலோசிக்கவில்லை என்ற குற்றச் சாட்டு கட்சியின் செயலாளர் உள் ளிட்ட பலரால் முன்வைக்கப்பட்டுள் ளது.

பொதுஜன பெரமுனவுக்கும் சுதந் திரக் கட்சிக்கும் இடையில் எந்தவித முரண்பாடும் கிடையாது.

எனினும், பதவிகள் மாற்றமடைவ தால் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டு மன்றி சஜித் பிரேமதாஸ, சரத் பொன் சேகா, அநுரகுமார திஸாநாயக்கவை யும் அன்று நாம் அழைத்தோம். இவர் கள் யாரும் வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதற்கான கௌரவத்தை நாம் அவருக்கு கொடுக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க கூட்டணி அரசியல் தொடர் பாக விளங்கிக் கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின் போதும் இரண்டு தலைவர்களும் வெவ் வேறாக செயற்பட்ட காரணத்தினால் தான் நாடு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு தற்போது இடம்பெற்று விடக்கூடாது என்பதற்காகத்தான், பேசித் தீர்மானங்களை மேற்கொள்ளு மாறு தெரிவிக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## காசா மீது...

நாளில் பதிவான அதிக உயிரிழப்பு இது என பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் மீது வான்வழி தாக்குதல் மேற்கொண்டு வருகின்ற நிலையில் 400க்கும் மேற் பட்ட ஹமாஸ் அமைப்பினரின் இலக் குகளை தாக்கியதாகவும், ஏராளமான ஹமாஸ் அமைப்பினரை கொன்றதாக வும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித் துள்ளது.

எனினும், இஸ்ரேலின் தாக்குத லால் காஸாவில் 2360 குழந்தைகள் உட்பட 5791 பேர் பலியாகியுள்ளதாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது. (ம-7)

*(முன்னர் வந்த செய்திகள் உள்ளே)*

## மீண்டும்...

சபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு நேற்று மாலை சென்ற அம்பிட்டிய சுமனரத்ன தேரர்,

தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல் வாதிகள் உள்ளிட்டோரை எச்சரிக்கும் வகையில் கடும் தொனியில் கத்தி கூச்சலிட்டதன் காரணமாக அப்பகுதி யில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இருதயபுரம் கிழக்குப் பகுதியில் உள்ள சிங்கள மயானத்தில் வீடு உடைத்த கழிவுப்பொருட்கள் போடப் பட்டுள்ள நிலையில் அங்குவந்த அம் பிட்டிய சுமனரத்ன தேரர் அதற்கு எதி ராக கடுமையான வார்த்தைப் பிர யோகங்களை கொண்டு பேசினார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்வதற்கான ஏற்பாடு களை செய்தனர்.

குறித்த பகுதியில் இரண்டு தினங் களுக்கு முன்பாக குறித்த கட்டிட இடி பாடுகள் கொட்டப்பட்ட நிலையில் அவற்றினை அங்கிருந்து அகற்று வதற்கான நடவடிக்கையினை எடுப்ப தாக மாநகரசபை ஆணையாளர் சுமன ரத்ன தேரரிடம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தாகவும் எனினும் அவர் நேற்று அங்கு சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த கட்டிட இடிபாடுகளை அகற்றி அப்பகுதியை தூய்மைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இரண்டு முச்சக்கரவண்டி களில் வந்த அம்பிட்டிய சுமனரத்ன தேரரும் அவருடைய சகாக்களும் அங்கிருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துகளை தெரிவித்ததுடன் இனமுரண்பாடு களை ஏற்படுத்தும் வகையிலும் கருத் துக்களை தெரிவித்திருந்தனர்.

அங்கு அம்பிட்டியே சுமன ரத்ன தேரர் கத்தி கூச்சலிடுகையில்,

"பொலிஸார் இந்த வீதியை மூடி னார்கள், பிரச்சினை ஏற்படுத்தினார் கள், இறுதியில் எமக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்தனர். இவர் களின் இந்த செயற்பாடு சரியானதா?

இவ்வாறு செய்ய வேண்டாம். நாம் உதவியற்றவர்கள். இனம் என்ற ரீதி யில், இங்கு இடம்பெறும் குற்றங் களைத் தடுக்க வேண்டும்.

நாட்டில் இனவாதம் இல்லை, மத வாதமும் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நல்லி ணக்கத்துடன் மிகவும் அமைதியாக வாழ்கின்றனர்.

சாணக்கியன் மற்றும் இங்குள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த் தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும். அவ்வாறு யுத்தம் ஏற்படுவதை தடுக்க முடியாது" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.(ம-7)

## மின்...

தெரிவித்து மட்டக் களப்பில் நேற்று தீப்பந்தப் போராட் டம் முன்னெடுக் கப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி பாலத் திற்கு அருகில் நேற்று மாலை கைகளில் தீப் பந்தங்கள் ஏந்திய வாறு கவனஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெ டுக்கப்பட்டது.

அதிகரித் துள்ள மின்சாரக் கட்டணத்தை குறைக்குமாறும் பொருளாதார நெருக்கடியிலி ருந்து நாட்டு மக் களைப் பாது காக்குமாறு வலி யுறுத்தியும் இந்த போராட்டம் முன் னெடுக்கப்பட் டது.

ஐக்கிய மக் கள் சக்தியின் ஏற் பாட்டில் நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக் களப்பு மாவட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட னர்.

இதன்போது கைகளில் தீப் பந் தங்களை ஏந்திய வாறு அரசாங்கத் திற்கு எதிரான பல்வேறு கோசங் கள் எழுப்பப்பட் டன. (ம-7)

## அரசு புதிய...

நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத் துத் தெரிவிக்கும் போதே தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார,

நாட்டில் உள்ள முறைமையை மாற்ற வேண்டும் என்றே மக்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த னர்.

எனவே அந்த மாற்றத்தைக் கொண்டு வரவே காலங்கடந்த சட்டங்களுக்குப் பதிலாக இன்றைய காலத்திற்கு ஏற்ற வகையில், அதிகமான சட்ட விதிமுறை களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3520
சீட்டிழுப்பு திகதி 25.10.2023
D 03 24 42 49
D 73536

தன நிதானய
திகதி 2023.10.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1308
J 16 29 49 55 J
40198

Lucky 7
திகதி 25.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0104
L7 இலக்கம் 2 2
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 7 8 2 4 9 1

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 587
தனுசு 04 31 32 58 தனுசு

மெகா பவர்
திகதி 25/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1626
C 09 41 56 69 72
50584

மஹஜன சம்பத
திகதி 2023/10/25
சீட்டிழுப்பு இலக்கம் 5278
V 6 1 6 0 4 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2252 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.25 தினம் புதன்கிழமை
04 29 30 55 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,616,840.00

சனிதா
திகதி 2023.10.25 வெற்றி வாரம் 4413
03 34 41 73 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,777,152.00
44432

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3964 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.25 தினம் புதன்கிழமை
01 34 50 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-
978088 684

திகதி 25.10.2023 வெற்றி வாரம் 1428
Q 11 20 23 27 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 456,681,654.20
311915 837
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
திகதி 2023.10.25 வெற்றி வாரம் 1968 வர்ணம் மஞ்சள்
10 14 63 65 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,130,816.00

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2078
சீட்டிழுப்பு திகதி: 2023.10.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,345,400/-
02 42 55 58 V
240009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை...

இலங்கை அமைச்சரவையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தினால் பல குழப்பங்கள் ஏற்பட்டு வருகின்ற நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

எனினும், அரசாங்கம் தொடர்வதற்கு ஆதரவளிக்காவிடில் உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தி வருதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட தீர்மானம் தவறானதென பொதுஜன பெரமுன குற்றம் சாட்டிவருகிறது.

மொட்டு கட்சி வகித்து வந்த அமைச்சுப் பதவிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் மகிந்த அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவுக்கு திடீர் தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு கணிசமான நேரம் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

"இந்த அரசாங்கத்தை அமைப்பதற்கும் உங்கள் நிலைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கும் மொட்டு கட்சி உங்களுக்கு ஆதரவளிக்கிறது. அதை மறந்து விடாதீர்கள்" என்றும் மகிந்த ராஜபக்ஷ கடும் தொனியில் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(மு-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17571)
076 825 7716 (ஆகாஸ்)

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE



வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P: 077 544 8503

சானை சென்டர்

சலூன் உபகரணங்கள்
- கத்திரிக்கோல்கள்
- கட்டர்(முடிவெட்டும் மெசின்)



தச்சுத் தொழில் உபகரணங்கள்
- காபண் வாள்கள்
- காபண் பிலேட்கள்
- காபண் அற்ற பிலேட்கள்
- றூட்டர் கூர் வகைகள்



மற்றும் அலுமினியம் வெட்டும் காபண் வாள்கள், டெயிலர் கத்திரிக்கோல்கள் ஆகியவை சானை பிடித்து தரப்படும்.

383, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.(M.S சலூன் பின்புறம்)
075 922 0122
077 618 2640
(17575)

விமலம் திருமண சேவை

கனடா, இலங்கை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17495)
கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
077 240 9276

அமெரிக்க அதிஸ்ட விசா
இன்னும் 08 நாட்களில் நிறைவடைகின்றன
இன்னும் 08 நாட்களே உள்ளன.
2024 நீங்களும் அமெரிக்காவில்...



விசாவை கையில் வாங்கி யாழ்ப்பாணம் வரும் போது பஸ்சில் இரவு முழுவதும் சந்தோசத்தில் நித்திரையே வரவில்லை. (C-7493)
இந்த வருடம் A/L
0768226244
55000 இலவச விசாக்கள்
V2 TRAVELS

அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7493)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

பணிப்பெண் தேவை

மாலுசந்தி பத்தானையில் வசிக்கும் வயோதிப மாதுவை தங்கி இருந்து பராமரிக்க பெண் பணியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். (17559)
தொடர்புகளுக்கு
077 062 4860


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு



கடந்த 26.09.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கு

### அமரர் இரத்தினசிங்கம் சிதம்பரம்


அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 24.10.2023 செவ்வாய்க்கிழமை பொக்கணை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 26.10.2023 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

சிவநகர்,
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு. (17569)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
1964 - 01 - 21



இறப்பு
2023 - 10 - 24

### புதியான் சாந்தரூபன்

(கிராம அலுவலர் - வல்வெட்டி மத்தி J/356)

சாந்தாதோட்டம் ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் அண்ணா ச.ச.நிலையம் கெருடாவில் தெற்கு தொண்டைமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தரூபன் அவர்கள் 24.10.2023 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புதியான் - செல்வி தம்பதிகளின் அன்பு புத்திரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானகலையின் அன்புக் கணவரும் சாருகாந் (பல்கலைக் கழகம் - அறிவியல்நகர் கிளிநொச்சி), தாருகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னம்மா, சிவசுப்பிரமணியம், நாகமுத்து, கமலாதேவி, சுமித்திராதேவி, சந்திரன், காந்தரூபன், ஸ்ரீலங்கரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவராசா (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), ஞானராசா (லண்டன்), ரஞ்சிதராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பூபாலன், சரஸ்வதி, சிவமணி, காலஞ்சென்ற யோகராசா, தவராசா, வதனி, சியாமளா, மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் சாந்தினி (சுவிஸ்), ஜெயகௌரி (சுவிஸ்), சாமந்தி (லண்டன்), நிரேகா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2023) காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 10.30 மணியளவில் தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்தில் பூதவுடல் தீயுடன் சங்கமிக்கும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அண்ணா ச.ச.நிலையம்,
கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு. (C-7491)

தகவல் - குடும்பத்தினர்
077 376 4273

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org